1981 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, எவ்வளவு வேகமாகக் கேள்வியைக் கேட்டார்களோ, அந்த வேகத்திலேயே, அங்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்ற எண்ணம் நமக்கு இருக்கிறது. ஆனால், அங்கே ஒரு உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டுமென்றால், ஏறத்தாழ ரூ. 15 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த விபத்துக்கள் நடந்திருக்கிற காரணத்தினால் உடனடியாக பரிசீலனை செய்யப்படும்.

வளவன் ஆற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 272— திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) முத்துப்பேட்டை ஒன்றியம் குன்னலூரிலிருந்து எக்கல் வழியாக மேலமருதூர் செல்லும் சாலையில் வளவன் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசிடம் குறிப்பேதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளவனாற்றுப்பாலம் பற்றி, 1978 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்பொழுது கேள்வி கேட்டபோது, வளவனாற்றுத் திட்டத்திற்கு ஒன்றியத்திலிருந்து ரூ. 70,000 அளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் அந்தக் கேள்வியைக் கேட்டால் இல்லையென்று அறிவிக்கிறார்கள். நான் மீண்டும் சொல்வது, அங்கு இரண்டு பக்கமும் போகும்போது 15 மைல் சுற்றித்தான் பிரிந்து செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே, மீண்டும் சம்பந்தப்பட்ட இலாகாவிற்குச் சொல்லி, அந்தப் பாலத்தைக் கட்ட பரிசீலனை செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

[முற்பகல் 9·50.]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக் கூடிய சாலை முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினால் பராமரிக்கப்படுகின்ற சாலை

ஆகவே அந்த சாலை அமைந்திருக்கின்ற ஒன்றியத்திற்கு ஏறக் குறைய 3,60,000 ரூபாய் செலவிட வேண்டுமென்ற மதிப்பீடு கொடுத்திருக்கிறார்கள். அந்த சாலையில் ஒரு பாலத்தைக் கட்ட வேண்டுமென்று சொன்னால் அதற்கு 4 லட்சரூபாய் செலவாகும் என்று மதிப்பீடும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவை களையெல்லாம் கருத்திலே கொண்டு நிதிநிலை சரியான உடன் கண்டிப்பாக அது கவனிக்கப்படும்.

கிருஷ்ணகிரியிலுள்ள அண்ணா—காந்தி மணி மண்டபம்

*வினா எண் 273 திரு.க. இரா. சின்னராசு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

கிருட்டினகிரி நகராட்சியில் அமைந்துள்ள அண்ணா—காந்தி மணி மண்டபத்தில் திரைப் படக் காட்சிகள் நடத்தும் வண்ணம் மாற்றி அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு: இல்லை.

திரு. க. இரா. சின்னராசு: தலைவர் அவர்களே, அண்ணா—காந்தி பேராலே கட்டப்பட்டுள்ள அந்த மணி மண்டபம் அங்கே சரிவர இயங்காமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதிலே நகராட்சியின் சார்பாக ஒரு திரையரங்கம் அமைக்க, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு காட்சியகம் நடத்துகின்ற அளவிலே அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் குழுவிற்கு அந்த மணி மண்டபம் 1976-ல் ஒப்படைக்கப்பட்டது. அதற்குப் பின்னிட்டு அந்த மண்டபத்தை மாவட்டத் தொழில் நிறுவன மையத்திற்கும், நூலக ஆணைக் குழுவிற்கும் விட வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே திரையரங்கு எதுவும் ஏற்படுத்தும் யோசனை அரசுக்கு இல்லை.

திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு தலைவர் அவர் களே, தர்மபுரியிலே கட்டப்பட்டிருக்கிற மண்டபம்தான் தொழில் நிறுவனத்திற்கு கேட்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கிருட்டிண கிரியிலே இருக்கிற மணி மண்டபம் சும்மாவே இருந்து கொண்டி ருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, கிருட்டினகிரியில் இருக்கிற அந்த மணி மண்டபம் இப்போது விழாக்களுக்கு வாடகைக்கு விடப்படுவதாக என்னிடத்திலே செய்திகள் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அங்கே ஒரு திரை யரங்கை ஏற்படுத்தலாமா என்று அரசு யோசனை செய்யும்.